# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
SPECIAL COURT UNDER THE NATIONAL INVESTIGATION AGENCY ACT, 2008
(SESSIONS COURT FOR EXCLUSIVE TRIAL OF BOMB BLAST CASES),
CHENNAI AT POONAMALLEE, CHENNAI – 56.

| **Spl.SC. No.** | **05/2024** | Deposition of | **P.W. 6** ( L.W. 29 ) |
|---|---|---|---|
| Name | Thiru. Mohammed Mustafa | Father's Name | |
| Street | | Village | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act of X of 1873 on the 06.05.2026.

**1 முதல் 6 வரையிலான எதிரிகள் ஆஜராகியுள்ளனர். 7ம் எதிரி ஆஜர்படுத்தப்பட்டுள்ளார். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியிருந்தனர்.**

**முதல் விசாரணை தொடங்கிய நேரம் 11.50 A.M.**

நான் கரூர் மாவட்டம் பள்ளப்பட்டியில் உள்ள உமர் பள்ளிவாசலில் இமாமாக கடந்த 4 வருடமாக உள்ளேன். நான் இமாமாக சுமார் 25 வருடங்களுக்கு மேல் இருந்து வருகிறேன். எனது அண்ணன் அபுல் ஹசன் ஷாதலி கரூர் பஜார் பள்ளிவாசலில் 25 வருடங்களாக இமாமாக உள்ளார். எனது அண்ணன் சிறுவர்கள் குரானை மனப்பாடம் செய்வதற்காக கரூர் பஜார் பள்ளிவாசலில் ஒரு மதர்ஸா நடத்திவருகிறார். 03.03.2024 அன்று மாணவர்களுக்கு பட்டமளிப்பு விழா ஏற்பாடு செய்திருந்தார். அந்த பட்டமளிப்பு விழாவில் நானும் கலந்துகொண்டேன். விழா நிறைவடைந்த பிறகு எங்கள் ஊரை சேர்ந்த பொறியாளர் சர்புதீனின் மகன் பைசல் என்பவர் எதிரி ஹமித் உசைனை எனக்கும் என் அண்ணனுக்கும் அறிமுகம் செய்து வைத்தார் (எதிரி ஹமித் உசைனை சாட்சி

நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார்). எதிரி ஹமித் உசைன் இஸ்புத்தாரி (Hizb ut Tahrir) என்ற அமைப்பை பற்றி எங்களுக்கு விளக்கி கூறினார். இஸ்லாமிய கிளாபத்தை இந்தியாவில் ஏற்படுத்தவேண்டும் என்றும் அந்த சிந்தனையை இந்தியாவில் அனைத்து இஸ்லாம் மதத்தினருக்கும் ஏற்படுத்தவேண்டும் என்றும் அவர் கூறினார். என் அண்ணன் இது தேவையில்லாத வேலை என்று எடுத்த உடனே சொல்லிவிட்டார். விழா முடிவடையும் தருவாயில் எதிரி ஹமித் உசைன் எங்களை போன்ற விழாவுக்கு வந்த உலேமாக்களை சந்திக்கவேண்டும் என்று அவர் கூறினார். எதிரி ஹமித் உசைன் எங்களை போன்ற உலேமாக்களான ஜக்கரியா, அப்துல் ஹமீத், யூசப், அஜரத் ஆகியோரை சந்தித்து கிளாபத்தை பற்றி பேசினார். 10 நிமிடம் எதிரி ஹமித் உசைன் பேசியவுடன் உலேமாக்கள் அவர் பேச்சில் உடன்பாடு இல்லை என்று கலைந்தார்கள். எதிரி ஹமித் உசைன் பள்ளப்பட்டியில் அவர்களை சந்திப்பதாக கூறினார் அதற்கு உலேமாக்கள் இங்கேயே பேசியாகிவிட்டது அதனால் சந்திப்பு தேவையில்லை என்று சொல்லிவிட்டார்கள். மறுநாள் காலை 6 மணி பஜிர் தொழுகைக்கு எதிரி ஹமித் உசைன் வந்தார். அப்போது நானும் என் அண்ணனும் இருந்தோம். எங்களிடம் எதிரி ஹமித் உசைன் விளக்கமாக பேசினார். இஜ்புத் தகரிரின்னுடைய (Hizb ut Tahrir) நோக்கம் கிளாபத்தை ஏற்படுத்துவது என்று கூறினார். எதிரி ஹமித் உசைன் எங்களை சந்திப்பது போல் தமிழ்நாட்டில் உள்ள மற்றவர்களையும் சந்திக்கபோவதாக எங்களிடம் கூறினார். நான் இது உடன்பாடு இல்லாத விஷயம், போலிசுக்கு தெரியுமா என்று நான் கேட்டேன்.

அவர் போலிசுக்கு இதுபற்றி தெரியும் என்றும் வாரத்திற்கு ஒருமுறை சென்னையில் உள்ள ஒரு ஹாலில் மீட்டிங் போடுவதாகவும் கூறினார். அதற்கு என் அண்ணன் இது சரியில்லாத விஷயம், இதில் எங்களுக்கு உடன்பாடு இல்லை நம் நாடு ஜனநாயக நாடு நமக்கு எல்லா சுதந்திரமும் கொடுக்கப்பட்டுள்ளது என்று கூறினார். மேலும் என் அண்ணன் எதிரி ஹமித் உசைனிடம் நீங்கள் நல்ல வேலையில் இருக்கிறீர்கள் வேலையையும் குடும்பத்தையும் பாருங்கள் என்று கூறினார். என் அண்ணன் இஸ்புத்தாரி (Hizb ut Tahrir) அமைப்பு குறித்து பேசுவதை தவிருங்கள் என்றும் எச்சரிக்கை விடுத்தார். எதிரி ஹமித் உசைன் எங்கள் மூலமாக இஸ்புத்தாரி (Hizb ut Tahrir) அமைப்பின் கருத்துக்களை பயான் மூலமாக மக்களுக்கு எடுத்துசெல்ல வேண்டும் என்று கூறினார் அதற்கு நாங்கள் அனுமதி மறுத்துவிட்டோம். பயான் என்றால் பள்ளிவாசலில் இமாம்கள் உரை நிகழ்த்துவது ஆகும். எதிரி ஹமித் உசைன் என் அண்ணனிடம் இரண்டு பக்க booklet கொடுத்தார். அதை பார்த்து முழுவதுமாக படிப்பதற்கு முன்பே என் அண்ணன் அதில் தனக்கு உடன்பாடு இல்லை என்று தெரிவித்துவிட்டார். அந்த booklet ல் இஸ்லாமிய கிளாபத்தை முழு உலகத்திலும் ஏற்படுத்தவேண்டும் என்றும் அந்த சிந்தனையை ஏற்படுத்தவேண்டும் அதை முஸ்லிம்கள் மறந்துவிட்டனர், எனவே இந்த சந்திப்புகளின் மூலம் இந்த சிந்தனையை உருவாக்கவேண்டும் என்றும் சொல்லபட்டிருந்தது. இதை படித்தவுடனேயே என் அண்ணன் இது வேண்டாம் என்று சொல்லிவிட்டார். அந்த booklet ஐ வாங்கி வைத்து

விட்டு என் அம்மா உடல்நிலை சரியில்லாததால் அவரை பார்த்துவிட்டு மறுநாள் என் அண்ணனை சந்தித்து எதிரி ஹமித் உசைனிடம் உபதேசம் செய்யக்கூடாது ' நாலு அப்பு அப்பி அனுப்பியிருக்க வேண்டும்' என்று என் அண்ணனிடம் கூறினேன் அதற்கு அண்ணன் பொறியாளர் சர்புதீனை சந்தித்து தங்கள் மகன் தீவிரவாதத்தில் ஈடுபடுவதாக தெரியவருகிறது கண்டித்து வைத்து அதை விட்டு விலகும்படி அறிவுறுத்தவும் சொன்னதாக என் அண்ணன் என்னிடம் கூறினார். அந்த booklet ஐ அண்ணனிடம் கிழித்து போடும்படி கூறினேன், அவர் அப்போதே கிழித்து போட்டுவிட்டார். ஒரு மாதம் கழித்து என்னை என்ஐஏ அதிகாரிகள் விசாரித்தார்கள்.

<u>முதல் விசாரணை முடிவடைந்த நேரம் 12.40 P.M.</u>

<u>குறுக்கு விசாரணை இல்லை.</u>

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

SUBRAMANIAN MALARVIZHI

Digitally signed by SUBRAMANIAN MALARVIZHI
Date: 2026.05.06 17:51:46 +0530

District and Sessions Judge.
Special Court under the National Investigation Agency Act, 2008,
Chennai @ Poonamallee.